# பெ.நாயகி

" புள்ளி எல்லாம் கோலம் ஆகும் "

ஆசிரியர்
சிவசக்தி ஆர்.கே.ரவி


மே 99

ரூ. 5/-



சைவ மதமே கிரித்துவ மதம்

- தலைஞாயிறு சுவாமி -



ஊருக்கு உழைத்திடல் யோகம்
வார்த்தை சித்தர்
வலம்புரி ஜான்
சிறப்புப் பேட்டி

சிவசக்தி அறக்கட்டளை குறுநாவல் போட்டியில்
பரிசுபெற்ற குறு நாவல்

# புள்ளி எல்லாம் கோலம் ஆகும்

—பெ. நாயகி



when parents fail to be parents,
kids are compelled to slip into those boots.

# புள்ளி எல்லாம் கோலம் ஆகும்

பெ. நாயகி.



காஃபி தம்ளரை வாங்கியபடியே மருமகளின் முகத்தை ஏறிட்ட உலகம்மாள். கேட்டாள். ''ஏம்மா இவ்வளவு காலையிலேயே வெளியே போயிட்டான்! ராஜா? ஏதும் சண்டையா?''

சந்தியா பதில் எதுவும் சொல்லாமல் விரக்தியாய்ப் புன்னகைத்தாள்.

''அழுத மாதிரி தெரியறியே சந்தியா''

சந்தியா கொஞ்சம் திரும்பியபடி முகத்தை மறைக்க முயற்சித்தாள்.

உலகம்மாள் விடவில்லை.

''கொஞ்சம் வெளிச்சத்துக்கு வா'' என்று பிடிவாதமாக மருமகளைக் கையைப் பிடித்து அருகே இழுத்து ஜன்னல் பக்கமாய் அவள் முகத்தைத் திருப்பிப் பார்த்து,

''ஈஸ்வரா! விரல்கள் பதிந்து கன்னிப் போயிருக்கே, தடியன்

அடிச்சானா?'' என்று அடிவயிற்றில் இருந்து பீறிட்டு வந்த ஆதங்கத்துடன் கேட்டாள்.

மடை உடைக்க முயன்ற அழுகையைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள் சந்தியா.

அவளை அப்படியே அணைத்துக் கொண்டாள் உலகம்மாள்.

''யம்மாடி! பூம்பிஞ்சு மாதிரி இருக்கியே, உன்னைப் போட்டு இந்தப் பாடு படுத்தறானே...''

உலகம்மாவின் வலது கை சந்தியாவின் பிடறியில் மென்மையாக அழுத்தம் காட்டியது இதமாக இருந்தது அவளுக்கு. அப்படியே கொஞ்ச நேரம் இருக்கத் தோன்றியது. ஆனால் அந்த இதத்தில் இன்னும் சில விநாடிகள் இருந்தால் அழுது விடுவோம் என்ற பயத்தில் தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டாள்.

''ஒண்ணுமில்லை அத்தை! வழக்கமான சண்டைதான் சாயங்காலம் எல்லாம் சரியாகி விடும். நீங்க கவலைப்படாதீங்க'' என்று புன்னகையை வரவழைத்தபடி சொன்னாள், ''மாமா எழுந்தாச்சா?காஃபி கொண்டு வரவா? என்று கேட்டாள்.

உள் அறையை எட்டிப் பார்த்தாள் உலகம்மாள். ''அது எங்கே? இன்னும் ஒரு மணிநேரமாவது ஆகும். நீ போய் உன் வேலையைப் பார். தேவைன்னா கூப்பிடறேன்'' என்று மருமகளை அனுப்பிவைத்துவிட்டு வாசலை வெறித்தாள்.

அந்த வீட்டின் வாசல்படியை ஒட்டியுள்ள அறை வீட்டின் பெரியவர்கள் இருவருக்குமாக இருந்தது. காற்றுக்கும் வெளிச்சத்துக்கும் வெளி உலகத் தொடர்புக்குமான ஜன்னல் அந்த அறையின் வாகான திசையில் இருந்ததும், அறையின் எதிர்ப்புறமாகவே பாத்ரூம், கழிப்பறை இருந்ததும் அந்த வயதான தம்பதிகளுக்கு வசதியாகப் போகவே தங்கள் உலகத்தையே அந்த இடத்துக்குள் குறுக்கிக் கொண்டுவிட்டனர். இன்னும் அதிகம் கெடாத ஆரோக்கியம் உலகம்மாளுக்கு இருந்தாலும் அந்த அறைவாசலில் உட்கார்ந்தால் ஒருபக்கம் வாசல் வழியே தெருவும் மறுபுறம் வீட்டின் உள் ஹாலும் முதுகுப்புறம் அறையினுள் கணவர் படுத்திருக்கும் தோற்றமும் என்று சகலமும் பார்வையின் அளவுக்குள் இருப்பதால் அவளும் வீட்டினுள் வர முயல்வதில்லை.

ஹாலின் ஒருபுறம் சமையலறை. மறுபுறம் சந்தியா ராஜாவுக்கான அறை.

சந்தியா அடுக்களையில் தம்ளரைக் கழுவி வைத்து விட்டு படுக்கை அறையினுள் போய்க் கட்டிலில் குப்புற விழுந்தாள். கண்களை மூடாமல் வெறித்தபடியே இருந்தாள்.

அறையின்ஓரத்தில் இருந்த மேசையின் மேல் கவிழ்ந்திருந்த தம்ளரில் இருந்து இன்னமும் கீழே சொட்டிக் கொண்டிருந்தது காஃபி. கீழேயும் சிறியதாய்க் குளம் கட்டி இருந்தது. தெறித்துச் சிதறியிருந்த சிறுதுளிகள் காய்ந்து போயிருக்க மொய்க்க ஆரம்பித்திருந்தன ஈக்களும் எறும்புகளும் அவ்வளவும் கட்டிலில் படுத்த வாகிலேயே தெரிந்தன.

எழுந்து போய் அதனைச் சுத்தம் செய்யலாமா என்கிற எண்ணம் பெண்மைக்கே உரிய இயல்பான உந்துதலில் எழுந்தது. கூடாது என்று அடக்கிக்கொண்டாள். இன்றுமுழுவதும் இப்படியே கிடக்கட்டும். ஈயும் எறும்பும் மொய்த்து நாறட்டும் இது நான்செய்த தவறு அல்ல.

ராஜா செய்தது. அதுவும் வேண்டுமென்றே ஆணவ வீம்பு காட்ட செய்தது. அவரே வந்து சுத்தம் செய்யட்டும். அவருடைய தவறுகளின் விளைவுகளை அவர் அறியும் முன் நானே சரிக்கட்டி சீர் செய்யச் செய்ய மேலும் மேலும் தவறு செய்யும் ஆர்வம் அவருள் வளர்கிறது. அவர் இன்னும் கெடுவதற்கு என்னுடைய செயல்களே காரணம் ஆகிவிடுகிறது. வேண்டாம் அதெல்லாம் அவருடைய அப்பா அம்மா காலத்துடன் போகட்டும்...



## துளிப்பா!

யார் உதைத்தது<br>
கிழக்கிலும் மேற்கிலுமாய்<br>
சுழல்கிறது<br>
சூரியப் பந்து.

– புஷ்பராணி

2



"சின்ன வயசிலிருந்தே எங்க ராஜாவுக்கு நாக்கு ரொம்ப நீளம். சாப்பாடு ஒரு நாள் ருசியில்லாமல் போயிட்டாலும் தட்டை விட்டெறிஞ்சிடுவான் பள்ளிக்கூடத்தில் படிக்கிற நாள்லயே,,," என்பதைப் பையனைப் பெற்றவர் பெருமையாகச் சொல்லலாமோ? அசிங்கமில்லையா இது? ஆனால் அப்படி யாருமே நினைக்க வில்லை என்பது தான் அசிங்கமாகப்பட்டது சந்தியாவுக்கு.

அவளைப் பெண்பார்க்க வந்திருந்தபோது ராஜாவின் அப்பா உதிர்த்த முத்துகள்தான் அவை.

பலகார, காஃபி தட்டுகளை எல்லோர் கைகளிலும் சேர்ப்பித்து விட்டு, செய்திருந்த மெல்லிய அலங்காரம் கலையாதபடி வணங்கிவிட்டு அமர்ந்திருந்தவள் பற்றிய பேச்சுப் பரிமாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. சந்தியாவின் அழகு, படிப்பு அமைதிமுதலான குணாதிசயங்களைப்பற்றி பொய்யும் மிகையுமாய்ப் பெரியவர்கள் அளந்துகொண்டிருந்தனர். மாப்பிள்ளையைப்பற்றிச் சொல்லியாக வேண்டும் என்கிற கடமைக்காகவோ என்னவோ அவர் அப்பா, மகனுடைய நாக்கு

நீளம்பற்றிச் சொன்னார்.

முதன் முறையாக சந்தியா மெல்ல ஏறிட்டு ராஜாவைப் பார்த்தாள். இந்த வார்த்தைகள் அவன் முகத்தில் தர்மசங்கடத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தவளுக்கு அதிர்ச்சி.

ராஜாவின் முகம் ஏதோ பாராட்டுப் பத்திரம் வாசிக்கப் பட்டதைக் கேட்டவருடைய பாவனையில் பூத்திருந்தது.

''பெருமைக்குச் சொல்றேன்னு நினைக்கக் கூடாது. எங்க பொண்ணைப் பற்றி நாங்களே சொன்னால் அவ்வளவு நல்லாவும் இருக்காது. அவளுடைய சமையல் திறமை அவங்கம்மாவுக்கே வாய்க்காத ஒரு அற்புத வரம். என்ன கைமணம் யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோன்னுதான் நாங்களெல்லாம் அடிக்கடி பேசிக் கொள்வோம்....'' என்று பெண்ணைப் பெற்றவர் இட்டுக் கட்டினார்.

இது சந்தியாவுக்கு நிஜமாகவே தர்மசங்கடத்தை அளித்தது. அதை யாரும் கவனிக்கும் மூடில் இல்லை.

''கேள்விப்பட்டோம் விசாரிச்ச இடத்துல எல்லாம் சந்தியா சமையல்ல எக்ஸ்பர்ட்டுன்னுதான் சொன்னாங்க''

''அப்புறம் என்ன? மாப்பிள்ளை தட்டைத் தூக்கி எறிகிற சந்தர்ப்பமே அமையப் போறதில்லை...'' என்று ஒரு பெரிய மனிதர் கூற அந்தக் கூடமே பெரிய ஜோக் கேட்டது போல் நகைத்தது.

உண்மையில் சாப்பாட்டுத் தட்டு தூக்கி எறியப்படுவதற்குக் காரணம் ருசி இன்மை அல்ல. திமிர், செல்லிடத்துச் சினம். அம்மாவோ தங்கையோ பெண்டாட்டியோ என்ன செய்துவிடுவார்கள் என்கிற அலட்சியம். அவன் அவ்வாறு செய்ததற்குத் தங்கள் தவறு தான் காரணமோ என்று கலங்கியபடி தவறு செய்தவனிடமே மன்னிப்புக் கேட்டபடி தரை துடைத்துச் சுத்தம் செய்வார்கள் என்கிற நம்பிக்கை, அடுத்த முறை இன்னும் பயந்து நடந்து கொள்வார்கள் என்கிற தைரியம்.

பெண், பிள்ளைப் பூச்சியாய் உள்ள வீடுகளில் மட்டுமே இது சாத்தியம். என்னவே தான் சமுதாயமே பெண்ணைப் பிள்ளைப் பூச்சியாய் அடித்து வைத்திருக்கிறது.

ஆண் நிஜமான தைரியசாலி என்றால் ஒட்டலில் போய் ருசி இல்லை என்று சொல்லி தட்டை விட்டெறிவது தானே? உங்க பிள்ளை அப்படி ஏதாவது பராக்ரமம் சாதித்திருக்கிறாரா

என்று கேட்க நினைத்து சும்மா இருந்தாள் சந்தியா.

அன்றைய அமைதியின் விளைவுதான் இன்றையகாஃபித்தம்ளர் சம்பவம், ருசி இல்லை என்று விட்டெறிவதை விடவும் முற்றிய நிலை வேறு ஒரு கோபத்துக்காகப் பாத்திரத்தை விட்டெறிவது. ராஜா அந்த நிலை வரை அடைந்து விட்டதற்கு நானே ஒரு காரணம்.

என்ன ஆனாலும் சரி. அவர் கொட்டிய காஃபியை அவரே வந்து சுத்தம் செய்யட்டும்.

மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

## 3



நினைக்க நினைக்கப் பற்றிக்கொண்டு வந்தது. இரண்டாயிரம் ரூபாய்! எவ்வளவு சிறுகச் சிறுகச் சேமித்த பணம்!

நேற்று காலையில் எவ்வளவு தூரம் குமைந்து கொண்டு வந்தார். குழப்பங்களால் சூழ்ந்து இருண்டு கிடந்த முகத்துடன் பார்க்கவே பாவமாக இருந்தார். காலையில் எழுந்ததிலிருந்தே எந்த வித சுதாரிப்பும் இன்றி எதையோ பறிகொடுத்தது போலவும்

தண்டனையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கைதி போலவும் படுக்கையிலேயே சாய்ந்திருந்தான் ராஜா, விட்டத்தை வெறித்தபடி. ''என்ன ஐயா இன்னிக்கு ஆபிஸ் போகிறாற்போல் தெரியலையே டிமிக்கியா?'' என்று சந்தியா கேலியாகக் கேட்ட போதும் பதில் சொல்லவில்லை

''என்னங்க, உடம்பு கிடம்பு முடியலையா?'' என்று அவன் அருகே உட்கார்ந்து நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.'' நல்லாத்தானே இருக்கீங்க? மனசு சரியில்லையா?'' என்று இதமாகக் கேட்டாள் அவன் மீது சாய்ந்தபடியே.

ராஜா மௌனம் சாதித்தான்.

''எதாவது வாய்திறந்து சொல்லுங்க. அப்பத்தானே என்ன கஷ்டம்னு தெரியும்?''

''ம்ச்சு. விடு சந்தியா. என் கஷ்டம் என்னோட போகட்டும். நீ தெரிஞ்சுதான் என்ன பண்ணப் போற?'' என்று தன்னிரக்கம் நிரம்பிய குரலில் அவன் சொன்னபோது ரொம்பவும் இளகிப் போனாள்.

''என் ராஜா! உங்க கஷ்டத்துக்கு நான் உதவாம யார் உதவுவாங்களாம் '' என்று அவனை இறுக்கியபடியே சொன்னாள்.

ராஜா அவளை மெல்ல விடுவித்தான்.

''சொன்னால் தாங்குவியா?''

''சொல்லுங்க ''

''ஆபிஸ்ல ஒருத்தனுக்கு இன்னிக்கு ஐயாயிரம் ரூபாய் தரணும். எத்தனையோ முறை தவணை சொல்லிட்டேன். இன்னிக்கு பணத்தை எடுத்து வைக்கலைன்னா அசிங்கமாயிரும்னு நேத்து மிரட்டி இருக்கான். அதான் மலைச்சுப் போயிருக்கேன். பணஉதவி செய்யறதாச் சொல்லியிருந்த வேற ஒரு ஃபிரண்டும் நேற்று நைட் கைவிரிச்சிட்டான். ஆஃபிஸ் போகவே பயம்மா இருக்கு. எதாவது அவமானகரமா நடத்திட்டா ஆஃபிஸ் பக்கமே தலைவைக்க முடியாமப் போயிடுமேன்னு....''

அவன் குரல் கிட்டத் தட்ட உடைந்து போயிருந்தது. ஆனால் ஐந்தாயிரமா என்று பிரம்மித்துப் போயிருந்த சந்தியாவுக்கு அவன் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளோ அவன் குரலில் இருந்த பயமோ தெரியவே இல்லை.

''அவ்வளவு கடன் எப்படிங்க ஆச்சு?'' என்று பயத்துடன் கேட்டாள்.

''அந்த விவரம் எல்லாம் சொல்ல எனக்கு நேரமில்லை இப்போ. சாவகாசமா ஒருநாள் சொல்றேன். இப்போதைக்கு இன்றைய பிரச்சனையில் இருந்து நான் தப்பிக்க என்ன பண்றதுன்னு யோசிக்க விடு'' என்று புரண்டு படுத்துக் கொண்டான்.

சந்தியா ஒன்றும் விளங்காதவளாக அங்கிருந்து நகர்ந்தாள். அவளுக்கு ராஜாவின் பிரச்சனைகள் எந்த ரூபத்திலானவை என்று தெரியும் தான். இந்த மாதிரியான ஒரு தப்பிக்க வழியற்ற மூலையில் ராஜா அடை படும் நாள் வரலாம் என்று தெரிந்தவள்தான். எதிர் பார்த்தது தான் என்றாலும் கஷ்டம்என்பது முழுப் பரிமாணத்துடன் முன் வந்து நிற்கும்போது ஏற்படும் மலைப்பும் அயர்ச்சியும் தவிர்க்க இயலாதவை தாமே.

வீட்டு வேலைகளில் கவனமே இல்லாமல் ஒருமணி நேரம் கழித்தாள். மீண்டும் ராஜாவிடம் போய் மெல்லக் கேட்டாள். ''என்னங்க, ஏதாவது வழி தெரிஞ்சுதா?

''ஒண்ணும் புரியலை''

''வேற பிரன்ட்ஸ் யாரும் தரமாட்டாங்களா?''

**ரா**ஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் மட்டும் 1.9 மில்லியன் மயில்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கையில் இவை வரண்ட கடலோரப் பகுதிகளிலும் வாழ்கின்றன.

### மொழிதோறும் மறுபெயர்கள்

| | |
|---|---|
| தமிழிலும், மலையாளத்திலும் | - மயில் |
| தமிழில் | - தோகை என்பதும் உண்டு |
| பெர்சியன் | - தோ (TAUS) |
| பிரெஞ்ச் | - போன் PAON |
| லத்தீன், கிரீக் | - பவோ PAVO |
| சம்ஸ்க்ருதம் | - மயூரா, நீலகண்டா, சிகி, கெகின் |
| | - மேகாநந்தா, சிகண்டின். |
| இந்தி, உருது, பஞ்சாபி, குஜராத்தி மராத்தி மொழிகளில் | - மோர் MOR |
| கன்னடம் | - நவிலு |
| தெலுங்கு | - நெமலி |
| விலங்கியல் பெயர் | - PAVO CRISTATUS |

இதன் விரிந்த தோகையைக் கலாபம் என்கிறோம்.

''ம்ஹூம் என்று உதடு பிதுக்கினான்.

''எல்லார்கிட்டயும் ஏற்கெனவே வாங்கி வச்சிருக்கீங்களாக்கும்...'' என்று அவள் முணுமுணுத்தபோது அவனிடம் பதில் வரவில்லை.

''ஒண்ணு செய்ங்க என் கிட்ட ரெண்டாயிரம் ரூபாய் இருக்கு. சிறுகச் சிறுக நான் சேர்த்துவைத்தது. தர்றேன். அதைக் கொடுத்து இப்போதைக்கு சமாதானப்படுத்துங்க கொஞ்சம் கொஞ்சமா அடைச்சிர்றேன்னு சொல்லுங்க. ஒண்ணுமில்லைங்கறதுக்கு இரண்டாயிரம் பெட்டர் இல்லையா? என்ன சொல்றீங்க? ''

ராஜா துள்ளி எழுந்தான் அவன் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பின் பேரொளி.

அவனை அனுப்பிவிட்டு சந்தியா சாமி கும்பிட்டாள். கடவுளே? அவமானகரமாக ஏதும் ஆகிவிடாமல் பார்த்துக் கொள். நீதான் என் ராஜாவுக்குக் காவல் என்று அழுது வேண்டினாள். அவன் மாலை திரும்பிவரக் காத்திருந்தாள்.

இரவு தாமதமாக வந்தான்.

''என்னங்க என்ன ஆச்சு?'' என்று இவள் ஆர்வமாகக் கேட்டதற்கு அவன் முகத்திலிருந்து வெளிப்பட்ட மதுவின் வாசனைதான் முதல் பதிலாக இருந்து.

''ளோண்ட் ஒர்ர்றீ ஷந்த்யா'' என்பதற்கு மேல் அவன் சொன்ன வார்த்தைகள் சந்தியாவுக்குப் புரியவில்லை. உடை கூட மாற்றாமல் அப்படியே கட்டிலில் விழுந்து தூங்கிவிட்டான்.

ஐயோ! அவ்வளவையும் குடிச்சே காலி பண்ணி விட்டாரா என்று நினைக்க தலை சுற்றியது சந்தியாவுக்கு. இரவு முழுவதும் தூக்கமில்லாமல் புரண்டுகொண்டிருந்தாள். மூன்று முறை அவனை எழுப்பிக் கேட்க முயன்று தோற்றாள்.

ஆனால் கொஞ்சநேரம் கழித்து நிதானமாய் யோசித்ததில் புரிந்தது அன்று அவன் நிறையக் குடிக்கவில்லை என்று. நிறையக் குடித்த நாட்களில் அவன் இரவு முழுதும் புலம்பியபடி கிடப்பது வழக்கம். கைகால்களைத் தாறு மாறாகக் கிடத்தியபடி அடித்துப் போட்ட பிணம் மாதிரி இருப்பான். இன்று அப்படி இல்லை. கொஞ்சம் தான் குடித்திருக்கிறார். ஒரு வேளை கடன்காரன் ஒத்துக்கொண்ட சந்தோஷத்தில் கொஞ்சமாய்ப் போட்டுக் கொண்டாரோ! இவரைப் போன்றவர்களுக்கெல்லாம் ஏதாவது ஒரு சிறிய காரணம் தானே வேண்டும்...

ஏதேதோ குழப்பங்கள் கிட்டத்தட்ட அதிகாலை வரை இவளைத் தூங்கவிடாமல் பண்ணின. காலையில் மேசையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.''நேத்து என்னங்க ஆச்சு?'' என்று ஆர்வமாய்க் கேட்ட போது புன்னகைத்தான். வெற்றி என்பது போல் கட்டை விரல் உயர்த்திக் காட்டினான்.

ஏதோ உன் புண்ணியம் அவமானத்திலிருந்து தப்பித்தேன். தேங்க்ஸ் என்றான்.

நெஞ்சில் கைவைத்து நிம்மதியாய் மூச்சுவிட்டபடி, 'தாங்க் காட்' என்றாள். அவனுடைய மலர்ந்த தெளிவான முகம் பார்த்து சந்தோஷப் பட்டாள்.

''காலைலயே எழுந்து உட்கார்ந்திருக்கேன். சூடா காஃபி கிடையாதா? என்று பரிதாபமாய் முகம் வைத்தபடி அவன் கேட்க 'ஒரு நிமிஷம் என்று பறந்தாள்.

இதனை நேற்று இரவே சொல்லியிருந்தால் எவ்வளவு நிம்மதியாக இருந்திருக்கும் என்று மனதினுள் ஒரு செல்லக் கோபம் எழுந்தது. இந்தச் சிறிய சந்தோஷத் துணுக்கு நேற்று அவன் குடித்திருந்ததை மன்னிக்க வைத்துவிட்டதே என்று நினைக்க வியப்பாக இருந்தது. ஆரம்ப காலங்களில் புருஷன் குடியைப் பற்றிப் பேசினாலே மிரண்டு போய்ப் பொங்கும் பெண்மனம் மெல்ல மெல்ல சமரசங்களுக்கு ஆளாகி விடுகின்ற அதிசயம் எப்படி சாத்தியமாகிறது என்றுவியந்தாள். எல்லாமே இருகோடுகள் தத்துவம்தானா? ஆண்கள் எல்லோரும் இதை அறிந்து வைத்திருக்கிறார்களோ? ஒரு தவறைச் சாதாரணமாக்குவது என்றால் அதைவிடப் பெரிய தவறு செய்து பெண்ணைப் பதற வைப்பது என்பது தான் இவர்களின் வாழ்க்கைக் கொள்கையோ.

புன்னகையை அடக்கிய படியே அவனிடம் தம்ளரை நீட்டினாள் ''பாக்கி மூவாயிரம் எப்போ தரச் சொல்லி இருக்கார்?'' என்று கேட்டாள்.

''மூவாயிரமா? நேத்திக்கே ஐயாயிரத்தையும் அடைத்திருப்பேன் சந்தியா! கடைசி ஆட்டத்தில் சின்னத் தப்பு பண்ணிட்டேன். வாய் வரைக்கும் வந்து நழுவிடுச்சு'' என்றான் காப்பியை உறிஞ்சியபடியே,

அவன் சொன்னது சந்தியாவுக்கு விளங்கவில்லை,

''புரியவில்லை. தெளிவாகச் சொல்லுங்க''

''இரண்டாயிரம் கொண்டு போனேனா. ஈவினிங் கார்ட்ஸ்



## வாரியார் பதில்கள்

**கேள்வி : நல்ல ஆட்சிக்கு இலக்கணம் என்ன?**

பதில் : நல்ல ஆட்சிக்கு இலக்கணம் காலத்தில் மழை பொழியும். பசுக்கள் நிரம்பப் பால் தரும். மக்கள் மனம் அறவழியில் நிற்கும். பயிர் செழிக்கும். சூதும் வாதும் வஞ்சனையும் களவும் இருக்க மாட்டா.

கேள்வி : விபூதி குங்குமம் இவற்றில் எதை நெற்றியின் மேலே பூசிக் கொள்ளுவது நல்லது முதலில் எதைப் பூசிக் கொள்ள வேண்டும்?

பதில் விபூதியைப் பூசிக்கொண்டு சந்தனம், குங்குமம் இவைகளைப் சிறிது மேல் நோக்கிய வண்ணம் திலகமாக இட்டுக் கொள்ள வேண்டும். மேல் நோக்கி இடுவது அறிவுக் கண்ணைக் குறிக்கும். முதலில் விபூதியை இட்டுக் கொண்டு அதனடியில் குங்குமம் இட வேண்டும்.

போட்டோம். ஐந்தாயிரத்தையும் அடைச்சிடலாமேன்னு பிளான் பண்ணினேன். நேத்து எல்லா ஆட்டமும் என் சாதகமாய்த் தான் இருந்தது சந்தியா. ஆறாயிரம் வரை ஜெயிச்சிருந்தேன். அதிர்ஷ்டம் எப்பவாச்சும் தான் இப்படி அடிக்கும். அவன் கடனையும் அடைச்சிட்டு உன் பணத்தையும் இரட்டிப்பா திருப்பித் தந்திடலாம்னு நினைச்சிட்டிருந்தேன். 'ஷிட் ! கடைசி ஆட்டத்துல எல்லாம் போச்சு'' என்றபடியே அடுத்த உறிஞ்சு உறிஞ்சினான் காஃபியை.

சந்தியாவுக்கு நெஞ்சு அடைக்காத குறை.

''என்ன சொல்றீங்க? பணம் ரெண்டாயிரமும் போச்சா? ''

''போன மாதிரி தான். பட் டோன்ட் ஒர்றீ, ஆட்டம் ஆரம்பிக்கும் முன்னாடியே அவனிடம் கண்டிஷனோட தான் உட்கார்ந்தேன். இந்தப் பணம் கடன் அடைக்கக் கொண்டு வந்தது, ஒருவேளை தோத்திட்டா இன்னும் ஆறுமாசத்துக்கு பணம் கேட்டு தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு ஸ்ட்ரிக்டா சொல்லியிருக்கேன். அதனால இம்மீடிட்டா இப்போ பிரச்சனை கிடையாது,'' என்று அசிங்கமாகச் சிரித்தான் ராஜா.

சந்தியா வெறுப்பின் உச்சத்தில் வெடித்தாள்.

''உங்களுக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா?''

பக்கென்று புரையேறியது ராஜாவுக்கு.

''என்ன சொன்ன?''

''உங்களுக்கு அறிவிருக்கான்னு கேட்டேன்''

தம்ளரை அப்படியே மேசையின் மீது எறிந்தான். சிதறிய காஃபியின் சில திவலைகள் சந்தியாவின் காலில் பட்டு எரிச்சலை ஏற்படுத்தின.

ஸ்ஸ்ஸு... என்று கால்களை உதறினாள்.

''வாய் ரொம்ப நீண்டதுன்னா நாக்கை அறுத்திடுவேன் ஆமா...'' என்று உறுமினான் ராஜா.

''நீங்க செஞ்ச காரியத்துக்கு உங்களைத் தூக்கி வச்சு ஆடணுமாக்கும். ரெண்டாயிரம் ரூபாய். எவ்வளவு தூரம் பொத்திப் பொத்தி சேர்த்ததுன்னு தெரியுமா?''

என்று தானும் குரலில் கோபம் காட்டினாள். சேர்த்துப் பார்த்தால் தானே தெரியும். அழித்துத் தானே பழக்கம் இங்கே''

''ஆமாம் ! பெரிய ரெண்டாயிரம். இதைக் கொடுத்திட்டா கடன் அடைஞ்சிருமோ... அறுபதாயிரம் கடன் இருக்கு தெரியுமா? சேர்த்துக் கொடுத்திருவியா? நாயே! பெரிசா சேர்த்தாளாம் ! நான் கொடுத்த காசு தானேடி? என்னவோ சுயமா சம்பாதிச்ச மாதிரி பேசற. நீதான் கிடைத்த வேலையையே விட்டுட்டு வந்து நின்ன மகாராணியாச்சே. காசு அருமையைப் பத்திப் பேச வந்திட்டா பெரிசா..''

அதிர்ந்து போனாள் சந்தியா அறுபதாயிரம் கடனா, எப்படி அவ்வளவு ஆனது? ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு கூட நாற்பதாயிரம் தானே சொன்னார்?

நடுநடுவே கேட்டபோதெல்லாம் அதையும் அடைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாரே அவ்வளவும் பொய்யா? கடவுளே ! குடியும் சூதும் என்கிற இரட்டை இடுக்கிப் பிடியில் இவர் நசுங்கியே போவாரா?

கண்களில் நீர் பெருகியது.

''அறுபதினாயிரம்னா சொன்னீங்க?''

''ஆமாம்''

''எப்படிங்க அவ்வளவு ஆச்சு? சீட்டாட்டத்துல இவ்வளவு தொலைக்கவும் முடியுமா? ஐயோ''

''அந்த ஆட்டமே அப்படித்தான். வரும் போகும்''

ராஜா இந்த வாக்கியத்தை சுருதி இறங்கிப் போய்த்தான் சொன்னான்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விக்கித்து நின்றாள் சந்தியா.

அவளுடைய மௌனத்தைத் தப்பர்த்தம் செய்தவனாக அவளைத் தேற்றுவது போல் பேசினான் ராஜா, ''அதற்காக பயப்பட வேண்டியதில்லை சந்தியா, என் பிரண்ட்ஸ் நல்லவங்க. பணம் கேட்டு அரிக்க மாட்டாங்க. ஒரேநாளில் முழு கடனும் அடைபட்டாலும் ஆச்சர்யப்படறதுக்கில்லை. இப்போ சொல்லு அந்த ரெண்டாயிரத்தைக் கொண்டு நான் கடன் அடைத்திருந்தாலும் பாக்கி மூவாயிரத்துக்கு அவன் ஆறுமாசம் டயம் தந்திருப்பானா? குறுகின கால இடைவெளியில் அந்தப் பணம் தான் நாம் தேற்ற முடியுமா? உனக்கே தெரியும் இரண்டாயிரம் ரூபாய் சேர்க்கவே நீ எவ்வளவு காலம் கஷ்டப்பட்டிருக்க அதனால இந்தப் பிரச்னையில் நம் மூளையைத்தான் உபயோகிச்சாகணும்? எதையும் தொலைச்ச இடத்தில் தானேம்மா தேடணும்? பீச்ல தவற விட்ட பர்ஸை பிள்ளையார் கோயில்ல தேடினா கிடைக்குமா? அதனால தான் அந்தப் பணத்தை ஆட்டத்தில் இறக்கினேன். விறுவிறுன்று ஆறாயிரம் வரைக்கும் ஜெயித்தும் இருந்தேன் தெரியுமா? கடைசி ஆட்டத்தில் தான்...''


''போதுமே உங்க திறமைப் புராணம். அதான் நீங்க சீட்டாட்டத்துல ஜெயிச்சு வாங்கிக் குமிச்சிருக்கிற ஊட்டி எஸ்டேட்டும் கொடைக்கானல் பங்களாவும் அள்ளிக்கொடுக்குதே. வெட்கமாயில்லை? ஒரு பைசா ஜெயிக்க வக்கில்லைன்னு தெரியுதுல்ல? அந்த அளவுக்கு ஆட்டம் வரலைல்ல? விட்டுத் தொலையறது தானே? என்ன ஜம்பம் வேண்டிக்கிடக்கு தோத்து ஒழியறதுக்கு? இந்த லட்சணத்துல அப்படியே வெற்றிக் களிப்பைக் கொண்டாட எவனோ ஊத்திக் கொடுத்த பிச்சைத் தண்ணி வேற... சே...''

பளாரென்று விழுந்தது ஓர் அறை சந்தியாவின் கன்னத்தில். பொறி கலங்கிப் போயிற்று.

''நாயே ! உன்னை மதிச்சு இவ்வளவு பேசினது என் தப்புடி. நான் அப்படித் தான் விளையாடுவேன். தோற்பேன். குடிப்பேன். நீ யாரு கேட்க? இஷ்டம்னா இரு. இல்லைன்னா எங்கேயாவது ஒழி...''

என்றவனாக அந்த இடத்தை விட்டு அகன்றான். அடுத்த பத்தாவது நிமிடம் தயாராகி வெளியே போய்விட்டான்.

## 4



“சந்தியா...” என்று உலகம்மாள் கூப்பிடுவது கேட்டது. மாமனார் விழித்துவிட்டார் போலும்.

சந்தியா யோசனைகளை ஒத்திவைத்துவிட்டுப் பரபரப்பானாள். கிழவருக்கு காஃபி எடுத்துப் போனாள். அடுத்த ஒரு மணிநேரம் அவருக்கு உடம்பு துடைக்க வெந்நீர், காலை டிபன் தயாரிப்பு, அவருக்கும் உலகம்மாளுக்கும் மருந்து என்று ஓடியது.

மாத்திரை விழுங்கி தண்ணீர் குடித்த தம்ளரை நீட்டியபடியே கிழவர் கேட்டார். “ராஜா எங்கேம்மா?”

“அவர் சாயங்காலம்தான் வருவார் மாமா, காலையிலேயே ஏதோ அவசரம்னு சீக்கிரமா கிளம்பிப்போயிட்டார்...” என்று இழுத்தாள்.

“என்னிடம் ஏம்மா மறைக்கிற? உன் அத்தை எல்லாம் சொல்லிட்டா, உன்னை அடிச்சானாமே”

சந்தியா பதிலேதும் சொல்லாமல் நின்றாள்.

''என்ன விஷயம்மா?''

''அப்படி ஒண்ணும் சீரியஸான மேட்டர் இல்லை மாமா நீங்க எதையும் நினைச்சு குழம்பாம இருங்க''

''எங்களை மன்னிச்சுக்கோம்மா. ஒரே பையன். அதுவும் ரொம்ப நாள் கழிச்சு பிறந்த பையன்னு ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்திட்டோம். இப்படி தறுதலையா வருவான்னு எதிர்பார்க்கலைம்மா, சரி, வயது பருவத்துல இப்படித்தான் இருப்பாங்க ஆம்பளைப் பசங்க. ஒரு கல்யாணம் பண்ணி வச்சிட்டா சரியாயிடும்னு தான் கல்யாணத்துக்கு ஏற்பாடே செஞ்சோம். குத்து விளக்காட்டம் நீ இந்த வீட்டுல காலடி எடுத்து வச்சப்போ எல்லாக் கஷ்டங்களுக்கும் விடிவுகாலம் வந்திடும்னு நம்பினோம். இப்படி உன்னையும் போட்டுப் பாடா படுத்துவான்னு நினைக்கலை தாயி. என்னுடைய போறாத வேளை இப்படி படுத்த படுக்கையா ஆகிப் போனேன். அவனும் தட்டிக் கேட்க ஆளில்லாமல் இன்னும் பேயாட்டம் போடறமாதிரி ஆகிப் போச்சு. தினமும் என்னை உறுத்தற குற்ற உணர்ச்சில எனக்குத் தூக்கமே வர்றதில்லை...''

கிழவர் ஆற்றாமையைப் பெருமூச்சாய் வெளிப்படுத்தினார். படுக்கையில் சாய்ந்துகொண்டார்.

''சாயங்காலம் வந்தான்னா என்னைப் பார்க்கச்சொல்லும்மா''

''சரி மாமா'' என்று அவர் சாப்பிட்ட தட்டை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

இவர் பங்குக்கு இவ்வளவுதான் முடியும். சமாதானம். ஆறுதல் மொழி, கண்டனம், .அப்புறம் உன்பாடு அவன்பாடு.

கல்யாணம் செய்து வைத்தால் சரியாகி விடுவானென்று யாரோ சொன்னார்களாம். தாய் சொல்லையும் தகப்பன் சொல்லையும் கேட்காத தறுதலை கல்யாணம் செய்து வைத்தால் மனைவி சொல் கேட்டு தர்மபுத்திரன் ஆகிவிடுவான் என்பது என்ன நம்பிக்கை? கல்யாணம் என்பது என்ன அவன் திருந்த வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் டிரீட்மென்ட்டா? பெனிசிலினுக்கு ஒத்து வரவில்லையா ஸ்ட்ரெப்டோ மைசின் போடு என்பதற்கு, இது என்ன மருந்து சமாசாரமா? தாய் சொல் கேட்கவில்லையா, பெண்டாட்டி கொண்டுவா. அதுவும் சேரலைன்னா என்ன செய்வார்களாம்?

பைத்தியக்காரர்களா ! தாய்க்காவது பத்துமாசம் சுமந்து பெற்று வளர்த்த கடமை இருக்கிறது. மனைவியாக வருபவள் என்ன பாவம் செய்தாள் என்று அவள் தலையில் பாரம் ஏற்றுகிறீர்கள்?

உங்களால் பெற்றெடுக்கப்பட்டு பாலும் சோறும் ஊட்டி முப்பது வருடம் வளர்க்கப்பட்டவன் உங்கள் சொல்லுக்கே மதிப்பு தராமல் உங்கள் வயதுக்கே மரியாதை தராதவன், அவனையும் விட வயதில் குறைந்த, அதிலும் அவனை அண்டி வாழ வந்த அந்நியப் பெண் ஒருத்தியின் சொல் கேட்டு அடங்கி ஒடுங்கித் திருந்துவான் என்பது என்ன மடத்தனம். தாய் தந்தையரால் சரிவர கவனிக்கப்படாத பையன்கள், உடன்பிறப்புகள் மற்றும் உறவுகளால் துரோகம் இழைக்கப்பட்டு வாழ்க்கையில் குழம்பிப் போயிருக்கும் இளைஞர்கள் வேண்டுமானால் மனைவியின் சரியான வழி காட்டுதலில் புதிய வாழ்க்கையை உணர்ந்திருப்பார்களே ஒழிய கெட்ட பழக்கங்களும் திமிர்த்தனமும் ஊறி வளர்ந்த தறுதலைகள் தாமாகவே ஆடி அடங்கும் வரை மனைவிக்கும் தலைவலியாகத் தான் வாழ்ந்திருப்பார்கள். திருந்துவதாவது ஒன்றாவது...

''அது தாம்மா மனைவிங்கற ஸ்தானத்துக்கே உரிய பெருமை. மனைவின்னா என்ன. மனையை ஆளப் போகிறவள்னு தானே அர்த்தம் !''

எவ்வளவு வசனங்கள் !

எல்லாம் பொய்.

ஊர் கூடி கிணற்றுக்குள் தள்ளிவிடும் சதி. சுற்றி நிற்கும் கூட்டம் இளிச்சவாயனைத் தேடி இப்படித்தான் வசனம் பேசும். உன்னை விட்டால் யாருக்கு முங்குநீச்சல் வரும்? தண்ணிக்குள்ளே போயிட்ட குடம் நீ குதிக்கலைன்னா போனதுதான். ஏதோ உன் ஒருத்தனாலதான் முடியும்ங்கற நம்பிக்கைல தான் கேட்கிறோம். நீயே தயங்கினா போனாப் போறது குடம்னு தலை முழுகிட்டுப் போகவேண்டியதுதான் என்று ஏற்றி விடுவதிலேயே எதிராளிக்கு மூடு கிளம்பி கிணற்றுக்குள் பாய்ந்துவிடுவான்.

பெண்ணையும் இப்படித்தான் பகடைக்காய் ஆக்குகிறார்கள். அப்பாடா ! நம் தலைவலி ஒய்ந்தது. இனி அவள் பாடு அவன் பாடு. அவள் சாமர்த்தியம்.

பானை பிடித்தவள் பாக்கியசாலியா இருந்தா ஏர் பிடிக்கறவன் ஏமாளியா இருந்தாலும் கூரை ஏறிக் கோழியும் பிடிச்சிடலாம்.

வானம் ஏறி வைகுந்தமும் போய்விடலாம் என்று நான்கு பழமொழிகள் வேறு.

பையனைப் பெற்றவர்களைச் சொல்லிக் குற்றமில்லை காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. பொண்ணைப் பெற்றவர்கள் என்ன பண்ணுகிறார்களாம்?

இந்த நாட்டில் பெண்ணைப் பெற்றவர்களுக் கெல்லாம் அவள் ஒரு சுமை. ஒரு கடன். மேலுக்கு தங்கமே செல்லமே என்கிற கொஞ்சல்கள், பெண்தான் குத்துவிளக்கு என்று பொய் சொல்லியபடியே எங்காவது பிடித்துத் தள்ளிவிட்டுவிட்டால் நிம்மதிப் பெருமூச்சு.

இவள் என் வருங்காலம். இவளுக்கு அறிவையும் திறமையையும் சிந்தனையையும் சரிவர ஊட்ட வேண்டும். ஏனென்றால் இவள்தான் அடுத்த தலைமுறைக்குப் பிறவிதரப் போகிறவள். இவள்தான் நிலம் இவளில் தான் விளையப் போகிறது எதிர்கால மானுடத்தின் ஒரு பகுதி. இந்த நிலத்தை நன்கு பண்படுத்தி உரமிட்டுப் பாதுகாத்து வைக்க வேண்டியது கடமை என்று எந்தப் பெண்ணைப் பெற்றவன் எண்ணுகிறான்?

இவள் பெயரில் ஃபிக்ஸட் டெபாஸிட்டில் பணம் போட வேண்டும். அது மூன்று மடங்காகி வரும்போது இவள் வயசுக்கு வந்து தயாராகி இருப்பாள். ஆபீஸ்ல பி.எஃப்ல லோன் போடலாம். அவசியம்னா கிராமத்து வீட்டை விற்றுக்கொள்ளலாம். கல்யாணம் கட்டி வைத்தாகிவிட்டால் கடமை முடிந்தது.

அதுவரைக்கும் போனால் போகிறது என்றுதான் படிப்பு.

அப்பா ! ஃபர்ஸ்ட் ரேங்க் எடுத்திருக்கேம்ப்பா

ம் ! வெரிகுட்.

அப்பா! எட்டாங்கிளாஸ்ல ஃபெயிலாயிட்டேம்பா,

என்னம்மா ! பத்து வரைக்குமாவது படிக்க வச்சிடலாம்னு நினைச்சேன். சரி விடு கழுதையை. நம்ம தங்கமணி நாலாவது மட்டும் படிச்சிட்டு இப்போ டவுன்ல வாக்கப்பட்டுப் போய்க் குப்பை கொட்டலை? உனக்கும் ஒருத்தன் ஆம்புடாம்லா போயிடுவான்??

பெண் படித்தால் சந்தோஷப்படும் தகப்பன்களை விடவும் அவள் படிக்காவிட்டால் சந்தோஷப்படும் தகப்பன்கள் அதிகம். படிப்பு தான் சுமாரே ஒழிய வீட்டு வேலை எல்லாம் மணியாச் செய்வா. சமையல் பண்ணினாள்னா இன்னிக்கெல்லாம் சாப்பிடலாம்... பொய்களுக்கா

பஞ்சம்.

பையனைப் பெற்றவர்களுக்குமே படித்த பெண் என்றால் கொஞ்சம் அச்சம்தான். படிக்காத அல்லது படிப்பு மண்டையில் ஏறாத பெண் என்றால் குடும்பப் பாங்காக இருப்பாள்.

இந்த நாட்டில் குடும்பப் பாங்கு என்கிற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் பார்க்க முனைந்தால் அபத்தமாக இருக்கும். விவரமே தெரியாத பேதையாக, உலகம் தெரியாத அறிவு மழுங்கிய, விவேகம் அற்ற, கோபம் காட்டாத, தன்னம்பிக்கை அற்ற, எதற்கெடுத்தாலும் புருஷனையோ மாமனார் மாமியாரையோ சார்ந்தே இருக்கின்ற, சுயசிந்தனை அற்ற பெண்ணுக்கு, குடும்பப் பாங்கான பெண் என்று பெயர்.

# 5



சந்தியாவுக்கு திருமணத்திற்கு முன்பே முற்போக்கான எண்ணங்கள் நிறைய இருந்தன. பள்ளியில் படிக்கிற காலத்திலேயே நிறைய வெளிப் புத்தகங்கள் படிக்கும் வழக்கம் இருந்தது அவளுக்கு. ப்ளஸ் டூ வில் மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றுத் தேறினாள். டாக்டருக்குப் படிக்கப் போவதாக நண்பர்களிடம்

சொல்லியிருந்தாள்.

அப்பா பொருளாதார நிலையைக் காரணம் காட்டித்தன் இயலாமையைத் தெரிவித்தார். அந்த நாட்களில் மருத்துவப் படிப்புக்கு இன்றளவு செலவுகள் கிடையாது. அரசுக் கல்லூரிகளில். ஃபீஸும் ரொம்ப அதிகம் இல்லை. சந்தியா ஸ்காலர்ஷிப் வேறு வாங்கிக் கொண்டிருந்தாள். இதெல்லாம் சொல்லிக் கேட்டுப் பார்த்தாள். அவள் டாக்டருக்குப் படித்தால் பெரிய இடத்தில் வரன் பார்க்க வேண்டிவரும் அது தன்னால் முடியாது என்பது அப்பாவின் வாதமாக இருந்தது.

''எனக்கு அந்தமாதிரி எண்ணமெல்லாம் இல்லைப்பா மாப்பிள்ளை என்னை விட, கம்மியாகப் படித்திருந்தாலும் பரவாயில்லை.''

அப்பாவின் முறைப்பில் புதிய கோபம் தெரிந்தது.

அதெப்படி இவ்வளவு தெளிவாச் சொல்ற? இப்பவே எவனையாவது மனசுல நினச்சுட்டிருக்கியா?''

சந்தியா அதிர்ந்து போனாள்.

''ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. உன் கல்யாண விஷயமா நான் தான் முடிவு எடுக்கணும். மாப்பிள்ளையா வர்றவன் உன் படிப்புக்கும் நம் அந்தஸ்துக்கும் எந்தவகையிலும் குறைந்திருக்கக் கூடாது. என்னுடைய சுயமரியாதையும் கௌரவமும் அதில் தான் அடங்கி இருக்கு. எக்காரணம் கொண்டும் நான் அதில் சமரசம் செய்து கொள்வதாக இல்லை''

''அப்பா ! இப்போ என் கல்யாணத்தைப் பற்றி எங்கே பேச்சு வந்தது? என் படிப்பு பற்றித்தானே கேட்டேன்,''

அப்பா கோபத்துக்குப் போய் விட்டார் என்றால் கொஞ்சநேரம் பேசமாட்டார். அம்மா ஓடிவந்து சந்தியாவின் கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்றாள்.

''அவங்களே கோபமா இருக்காங்க, நீயும் சரிக்குச் சரின்னு பேசிட்டிருக்க'' என்று கண்டித்தாள்.

அன்றைய உரையாடலில் அப்பாவின் கோபம் சம்பந்தா சம்பந்தம் இல்லாதது. தன் இயலாமையை மறைக்க, தன் கருத்தை நிலைநாட்ட, அப்பா சூடிக் கொள்கிற முகமூடிக் கவசம் தான் அவருடைய கோபம் என்று சந்தியாவுக்குத் தெரிந்தது. யாரிடம் விளக்கிச் சொல்வது? அம்மா இப்படிப்பட்ட வார்த்தைகளுக்



## ஏழு நற்குணங்கள்

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| கோபத்திலும் | - | பொறுமை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| வறுமையிலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பணிவு. |

## வாரியார் பதில்

கேள்வி : கணவன் பெயரை மனைவி சொல்லக் கூடாது என்கிறார்கள் அதனால், என் கணவர் பெயர் கந்தர் சஷ்டி கவசத்தில் பலமுறை வருவதால் நான் அதைத் தினமும் படிப்பது சரியாகுமா?

பதில் : இறைவனுடைய அருள் நூல்களைப் பாராயணம் புரியும்போது அதில் கணவன் பேர் வருமானால் அதைப் படிப்பது குற்றம் ஆகாது. மற்றைய நேரங்களில் கணவனுடைய நாமத்தைக் கூறுவது பிழையாகும்.

கெல்லாம் அப்பாற்பட்டவள்.

சந்தியா அப்போதைக்கு மௌனமானாள்.

அப்பா போனால் போகிறதென்று அவளை உள்ளூர் கல்லூரியில் பி.ஏ, சேர அனுமதித்தார். சந்தியா சைக்காலஜி சேர ஆசைப்பட்டாள். அப்பாவிடம் யாரோ அது கிறுக்குப் பயல்களின் படிப்பு என்று சொல்லிவிட சந்தியாவுக்கு சரித்திரம் படிக்கத்தான் அனுமதி கிடைத்தது.

பி.எ, முடித்தபின் இரண்டு வருடங்கள் சும்மா இருந்தாள். தபால் மூலம் கூட எம்.ஏ., படிக்க அனுமதி இல்லை. அப்பா ராஜாவின் போட்டோவை நீட்டினார்.

''பையன் எப்படி?'' என்று ஆரம்பித்தார். அம்மா உடனே முந்தானையை எடுத்து தோள் மூடி நின்றாள்..

''பி காம் டிகிரி ஹோல்டர். பிரைவேட் கம்பெனியில் அக்கவுண்டன்ட். ஒரே பையன். வசதியான குடும்பம். சொந்த வீடு. ஒரு பிக்கல் பிடுங்கல் கிடையாது. ஆள் ஜம்முனு பேருக்கு ஏத்த மாதிரியே ராஜா தான். அடுத்த வாரம் பார்க்க வர்றேன்னு

சொல்லியிருக்காங்க. அவங்க ஓ கே. சொன்னா வர்ற அக்டோபர்ல முடிச்சிடலாம்னு இருக்கேன்''

''அப்பா! –என்று அதிர்ந்தாள். அவசரமா டக்கு டக்குன்னு முடிவு சொல்லாதீங்கப்பா. அவங்க வீடு சுற்றம் பற்றி எல்லாம் நன்கு விசாரித்து முடிவெடுக்கலாம்''

''இல்லை சந்தியா! உனக்கு முடிச்சிட்டு உனக்கு அப்புறம் உள்ள தங்கை தம்பிகளைக் கவனிக்கணும் நான். மேலும் இது நல்ல இடம்னு பட்டதால் தான் சரி சொன்னேன்.''

''நல்ல இடம்னு எதை வைத்து தீர்மானம் பண்றீங்கப்பா. அந்த ஊர்ல நமக்கு சுற்றமோ உறவோ கூட யாரும் இல்லை. லக்கிலி என் ஸ்கூல் பிரண்டு ஒருத்தி அந்த ஊர்ல தான் இருக்கா. நீங்க அவங்க வீட்டு அட்ரஸ் மற்ற விவரங்களைக் கொடுங்க. அவளுக்கு எழுதறேன். அவள் விசாரித்து விட்டுச் சொல்லட்டும்.'

அப்பா சிரித்தார். ''என்னம்மா ஊர்ல இல்லாத அதிசயமா பேசற, நாங்க பெரியவங்க பார்த்து முடிவு பண்றோம். உன் வயசு பொட்டப்புள்ள என்ன விசாரிச்சு சொல்லும்?''

''ஜஸ்ட் ஒரு விசாரிப்புல என்னப்பா கெட்டுடும்?''

அப்பாவுக்கு தன் முடிவை அடுத்த தலைமுறையைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் மறுபரிசீலனை செய்வதா என்கிற கோபம் துளிர்விட ஆரம்பித்தது.

''வேணும்னா நீயே அந்த ஊருக்குப் போய் மாப்பிள்ளைப் பையனைச் சந்தித்துப் பேசி பழகி ஒரு முடிவுக்கு வர்றியாம்மா?''

''அந்த அளவு முற்போக்கா பெரியவங்க சிந்திக்க ஆரம்பிச்சுட்டா பெண்களோட பிரச்னைகள்ல பாதிக்குமேல சரியாகி விடுமேப்பா''

''சரிம்மா நீங்க பொண்ணு பிள்ளைங்க பேசிப் பழகிட்டு சரியில்லைன்னு பட்டா வேணாண்ணுடுவீங்களா?''

''ஒய் நாட்?''

''அப்படி எத்தனை பேரோட பழகுவீங்களாம்?''

''ஏன்? பத்து பார்த்தா ஒண்ணு தேறாதா?''

''என்னங்க நீங்க அவள் தான் அறிவில்லாமல் பேசறான்னா நீங்களும் பேச்சை வளர்த்திட்டே போறீங்க,''
என்று குறுக்கே பாய்ந்தாள் அம்மா.

''நீ சும்மாயிருடி நான் என்பொண்ணு பேச்சுல அப்படியே ஓ

மயங்கிப் போய் நின்னுட்டிருக்கேன். லண்டன்ல பிறந்து அமெரிக்கால வளர்ந்த மாதிரி எவ்வளவு மாடர்னாபேசறா! இன்னும் கொஞ்சம் பேச விடுவியா...குறுக்கே பேசி சுவாரசியத்தைக் கெடுக்காதே''

அப்போதுதான் சந்தியாவுக்கு அப்பா தன் பேச்சைக் கேலிக்கிடமாக்கிச் சிரித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

''அப்பா நான் சொன்னதுகளை நீங்க அமைதியா யோசனை பண்ணிப்பாருங்க. தப்பில்லைன்னு புரியும்.''

''அடி செருப்பாலே சின்ன வயசிலயே கண்டகண்ட புஸ்தகங்களைப் படிச்சா இப்படித்தான் பேசச் சொல்லும். நீ படிக்கிற விஷயங்களெல்லாம் குடும்பப் பொண்ணா லட்சணமா உன்னை வளர விடாதுன்னு எனக்கு முன்னமே தெரியும் அதான் உன்னை வெளியூர் மெடிகல் காலேஜுக்கு அனுப்பிப் படிக்க வைக்கலை. முற்போக்கு அது இதுன்னு நீ எந்த எல்லை வரை போவாய்னு என்னால் கற்பனை கூட செய்ய முடியலை...''

சந்தியாவுக்கு உச்சி முதல் பாதம் வரை ஒரு முறை கூசி நடுங்கியது. காதுகளைப் பொத்திக்கொண்டாள்.

''குடும்பப் பொண்ணா லட்சணமா உங்க அம்மா மாதிரி நம்ம பண்பாட்டுக்கு கலாச்சாரத்துக்கு ஏத்த மாதிரி வாழப் பாரு. புரியுதா? பொண்ணுங்கறவ மெர்க்குரி விளக்கு மாதிரி கண் கூச வைக்கக் கூடாது. குத்துவிளக்கு மாதிரி இருக்கணும். புரியுதா? நாங்க பெரியவங்க நாலும் யோசித்து தான் ஒரு முடிவு எடுப்போம். தெரியுதா?

சின்னப் பிள்ளைங்க பார்த்து முடிவு பண்ற விஷயமில்லை இது என்று வெடித்து விட்டுப் போய்விட்டார்.

அவர் என்ன சொன்னார் என்பதே புரியவில்லை சந்தியாவுக்கு. குறிப்பாக மெர்க்குரி விளக்கு, குத்து விளக்கு என்கிற உவமைகளால் என்ன சொல்ல முயன்றார் என்று தெரியவில்லை.

அம்மாவோ தன் கணவனின் பேச்சில் பிரமித்துப் போயிருந்தாள். அவளுக்கும் புரிந்திருக்கவில்லை. ஆனால் ஏதோ பெரிய விஷயம் சொல்லி இருக்கிறார் என்று மட்டும் நம்பிக் கொண்டாள். அதற்குத் தான் பண்பாடு என்று பெயர் வைத்திருக்கிறார்களோ என்னவோ!

# 6



கல்யாணம் ஆனது. மூன்றாம் நாளே ராஜா மகா முன்கோபி, மூர்க்கன் என்று தெரிந்தது. 'கோபம் உள்ள இடத்தில் தான்ம்மா குணம் இருக்கும்' என்று அம்மா சமாதானம் சொன்னாள். அடுத்த பத்தாம் நாள் ராஜாவுக்குக் குடிப் பழக்கம் உண்டு என்று தெரியவந்தது. 'அவன் நிரந்தரக் குடிகாரன் கிடையாதும்மா. எப்போதாவது மனசு சரியில்லைன்னா குடிப்பான்னு கேள்விப்பட்டிருக்கேன். சத்தம் போட்டுப் பார்க்கறேன். திருந்திடுவான் ! என்று மாமனார் குற்ற உணர்வு சிறிதும் இல்லாத குரலில் சொன்ன போது யார்மேல் என்றே தெரியாத கோபம் வந்தது.

அன்று அவர் ராஜாவைக் கடிந்துகொண்டதற்காக இரவில் முதன்முறையாக அவனிடம் அறை வாங்கினாள். பெண்டாட்டியைக் கை நீட்டி அடிக்கும் பேடித்தனமும் உள்ளவன் என்பது அன்று தெரிந்தது. சொந்த வீடு என்று சொல்லப்பட்டவீடு அவர்கள் ஜெயிக்க வாய்ப்பே இல்லாத ஒரு வழக்கில் மாட்டியிருப்பது தெரிய வந்தது. சம்பள தினத்தன்று அவன் குறைவாகக் கொண்டு வந்த பணத்திலிருந்து அவனுக்கு சீட்டாடும் பழக்கம் உண்டு என்பதும்

தெரிய வந்தது.

பெரியவர்கள் நாலும் யோசித்துப் பார்த்து செய்த கல்யாணம்!

ஆயிரம் காலத்துப் பயிர்!

உள்ளூர்த் தோழி மட்டும்தான் பேச்சுத் துணை ஆறுதல். ஆரம்ப காலங்களில் வந்து போய் இருந்தாள். வேஷப் பூச்சுகளைக் கலைத்துக் கொண்டு வெளிப்படையான பேச்சுகளை அவளுடன் மட்டும் தான் வைத்துக் கொள்ள முடிந்தது.

''ஏண்டி ! எனக்கு இரண்டு வரி எழுதிக் கேட்டிருக்கக் கூடாதா? இந்தக் குடும்பத்தைப் பற்றிச் சொல்லி இருப்பேனே! உன் வீட்டுக்காரர் வேலை பார்க்கிற இடத்தில் என்னவருக்கு பிரன்ட்ஸ் இருக்காங்க'' என்றாள் ஒருநாள். சந்தியா விரக்தியாகச் சிரித்தாள்.

''பொண்ணாப் பிறந்தா ஒண்ணு பெரிய பணக்கார வீட்டில் பிறக்கணும் அல்லது கஞ்சிக்கும் இல்லாத ஏழை வீட்டில் பிறக்கணும். நடுத்தரக் குடும்பத்தில் பெண் பிறப்பு என்பது தண்டனைதான்''

''இக்கரைக்கு அக்கரை பச்சை''

''அவர்களுக்குப் பிரச்னையே இல்லை என்று சொல்ல வரவில்லை பிரச்னையின் பரிமாணம் நடுத்தரக் குடும்பங்களில் கொஞ்சம் அதிகம்''

''ஏழை தன்னை ஏழை என்றோ பணக்காரன் தன்னைப் பணக்காரன் என்றோ காட்டிக் கொள்வதற்குத் தயங்குவதில்லை. நடுத்தரக் குடும்பங்களில் போலித்தனம் அதிகம். பிரச்சனையின் மூலமே அதுதான்.''

''கூசாமல் வேஷம் போடறாங்கடி. வசதியான வீடு, வரதட்சனை அதிகம் கேட்காமல் வருகிறார்கள் என்றால் தொழுநோயாளியிடம் கூடப் பெண்ணைத் தள்ளிவிட்டுவிடுகிறார்கள்.'' ''சரிவர விசாரித்துச் செய்தால் பிரச்னை இல்லையே''

''எங்கே விசாரிக்கிறார்கள்! மாப்பிள்ளை வீட்டைப்பற்றி! விசாரிக்க வேண்டும் என்று சொல்வதற்கு, பெண் லண்டனில் பிறந்து அமெரிக்காவில் வளர்ந்திருக்கவேண்டும்.
இந்த நாட்டில் பிறந்தவளுக்கு அந்தத் தகுதி கிடையாது.''

''சந்தியா ! நீ அதீத விரக்தியில் பேற...''

''கடமை முடிப்பது என்ற பெயரில் பெண்ணை எங்காவது தள்ளி விடுவது என்று நினைப்பவர்களை விடஙள கருவிலேயே அழித்து

விட நினைப்பவர்கள் பெட்டர்னு தோணுது'' வளர்த்து ஆளாக்குகிறேன். பேர்வழி என்று அவளையும் கஷ்டப்படுத்தி தாங்களும் கவலைப்படுவதாக முதலைக் கண்ணீர் வடித்து...''

பேசிப் பேசித் தன் கவலைகள், வெறுப்புகள், விரக்திகள் எல்லாவற்றையும் தோழியிடம் கொட்டியதில் மூளையின் யோசனைப் பகுதியைச் சூழ்ந்து மறைத்திருந்த சஞ்சல மேகங்கள் விலகத் தொடங்கின. பழைய படி மூளை தெளிவாகச் சிந்திக்கத் தொடங்கியது.

''ஏன் சந்தியா, அப்பப்போ உங்கம்மா வீட்டில் போய் இருந்து விட்டு வரலாம் அல்லவா? கொஞ்சம் ரிலீஃபாக இருக்குமே''

''நோ எக்காரணம் கொண்டும் அவர்களிடம் போய் அழுவதில்லை என்பதில் தீர்மானமாக இருக்கிறேன்'' என்பாள் தெளிவாக.

''ஏண்டி ! அழுது என்ன ஆகப்போகுதுன்னு நினைக்கறியா?''

''அதுவும் ஒரு காரணம் இதுவரை எங்கப்பா எழுதின எந்தக் கடிதத்திலும் நீ எப்படி இருக்க என்று கேட்டு எழுதலை. நீ நன்றாக இருக்கிறாய் என்று நம்புகிறேன் என்கிற நம்பிக்கை தானே வருகிறது. அதற்கு என்ன அர்த்தம்?,,,, நீ நன்றாகத் தான் இருக்கிறாய்

## வாரியார் பதில்

கேள்வி : இன்றைய இளைய தலைமுறையினரின் பகுத்தறிவளர நீங்கள் ஒரு முட்டுக்கட்டை தானே?

பதில் : முதலில் பகுத்தறிவு எது என்பதை உணர்தல் வேண்டும்.

'சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு' - குறள்

அறிவு என்பது புலன் வழி செல்லாது நலன் வழி செலுத்தி மனத்தை அடக்கி ஆள்வதாகும். தேருக்கு இடுகின்ற முட்டுக்கட்டை தேரைக் கோணல் வழியில் போக விடாமல் நேர்வழியில் செல்ல உதவுகின்றது. அது போல் பகுத்தறிவாளர்கள் மறநெறி செல்லாது அறநெறி செல்ல இடுகின்ற முட்டுக்கட்டை நான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இதிலிருந்தே முட்டுக் கட்டையின் உபயோகத்தை நீர் தெரிந்து கொள்ள வேணடும். தெளிந்து திருந்த வேண்டும்.

என்று எனக்கே சொல்வது போல் தானே? அவரிடம் போய் அழுவானேன். அவருக்குத்தான் இன்னொரு பெண்ணைத் தள்ளிவிட வேண்டி இருக்கே''

ஒர் அதீத கணத்தில் தோழிக்கே ஒரு சந்தேகம் வந்தது.

''சந்தியா ! நீ எதுவும் விபரீத முடிவு எடுப்பதற்கு நினைத்துக் கொண்டிருக்கிறாயா?''

சந்தியா சிரித்தாள்.

''என்ன தற்கொலை அல்லது விவாக ரத்து என்று முடிவெடுத்து விடுவேன் என்று நினைக்கிறாயா? நான் அவ்வளவு கோழை இல்லை. என் பிரச்சனைகளை நான் பேராடித் தீர்ப்பேன். களத்திலிருந்து ஒடிவிடுவது பிரச்னையின் முடிவு அல்ல. உரிமையுள்ள ஒரு புருஷன் வீட்டில் போராடி ஜெயிக்க முடியவில்லை என்றால் என் வாழ்க்கைக்கே அர்த்தமில்லாமல் போயிடும்டி''

தோழியின் கணவர் மூலம் ராஜாவைப் பற்றித் துப்பறிய முயல்கிறாள் என்கிற சந்தேகம் ராஜாவுக்கு வந்த அன்று வீட்டில் ரசாபாசமான சண்டை. அவமானத்தில் கூனி முகம் சிவந்து வெளியேறிய தோழியைக் கண்ணீருடன் பார்த்தபடி விக்கித்து நிற்கட்டும் தான் முடிந்தது சந்தியாவால்.

இருந்த ஒரே ஆறுதலும் அறுந்து போனாலும் வட சந்தியா சோர்ந்துவிடவில்லை.

நாளை என் பிள்ளைக்கு மாத்திரம் இந்த மாதிரியான ஒரு நிலை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டாள். அவள் மலர்ந்து மணம் பரப்ப அனுமதிக்க வேண்டும். உலகத்தைத் தெளிவாக அவளுக்குக் காட்ட வேண்டும். எல்லோருடனும் பழக அனுமதிக்க வேண்டும். அடுத்த தலைமுறை நன்றாக இருக்க வேண்டும்.

இந்த எண்ணம் தோன்றும்போதெல்லாம் கண்களில் நீர் முட்டும் அவளுக்கு. வெறும் வயிற்றைத் தடவி விட்டுக் கொள்வாள்.

அந்த நாள் வருமா? அப்படி ஒரு நாள் வராமலேயே போய்விடுமோ?

## 7



ராஜாவிடம் கெஞ்சிப் பார்த்தாள். சீட்டாட்டத்தை மட்டும் விட்டு விடும்படி வேண்டினாள். அவனுடைய கெட்ட பழக்கங்கள் என்று மனதினுள் பட்டியல் போட்டதில் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமான பாதிப்பு ஏற்படுத்துகின்ற செயல் இதுவாகத் தான் பட்டது அவளுக்கு. ஒவ்வொன்றாக விடச் செய்ய வேண்டும். முதலாவதாக இது.

சமாதானமாக இருக்கும் போது ராஜா மென்மையாகப் பேசுவான். ''இதோபாருடா சந்தியா. நான் வேண்டுமென்றோ சந்தோஷத்திற்காகவோ சீட்டாடுகின்றேன் என்று நினைக்கிறாயா? அந்த நாட்களெல்லாம் போயாச்சும்மா. இப்போ என்னுடைய உறுத்தலெல்லாம் அந்தப் பாழாய்ப்போன ஆட்டத்தால் நான் தொலைத்த விஷங்களும் இன்று என்னைச் சூழ்ந்துள்ள நாற்பதாயிரம் ரூபாய் கடனும் தான். எத்தனை நாள் இரவுகளில் தூக்கம் வராமல் புரண்டிருக்கிறேன் தெரியுமா? அந்த இழப்பின் தாக்கம் பெரிய கொடுமை சந்தியா. அது தருகின்ற உந்துதலில் தான்நான் மீண்டும் மீண்டும் சீட்டாட ஓடுவதே. பல சமயங்களில் நான் குடிப்பது கூட

அதனால் தான்''

சந்தியா அவனுக்குத் தேறுதல் சொல்ல முயன்றாள். ''நீங்க பழையது எல்லாவற்றையும் மறந்துடுங்க ராஜா. இன்னில இருந்து புது வாழ்க்கைன்னு நினைச்சுக்கோங்க.

கடன் சம்பந்தமான உறுத்தல் வரும்போதெல்லாம் தனிமையைத் தவிர்த்திடுங்க. ராத்திரி தனியா யோசிக்காதீங்க. என்னையும் எழுப்பி விடுங்க. ரெண்டுபேரும் வேறு எதாவது பற்றிப் பேசி சிந்தனையைத் திசை திருப்பிக்கலாம். அந்த உறுத்தல்களில் இருந்து விடுபட முயற்சி செய்ங்க. மற்றதெல்லாம் சரியாகி விடும்.''

''கடன் இருக்கே சந்தியா''

''அடைக்கறது எப்படின்னு திட்டம் போடலாம். இந்த விஷயம் உங்க அப்பா அம்மாவுக்குத் தெரியுமா?''

''அரசல்புரசலா நான் சீட்டாடுவது தெரியும். கடன் பற்றித் தெரியாது''

முதல் வேலையாக மறுநாள் மாமனார் மாமியார் மத்தியில் அவன் முன்னிலையில் விஷயத்தைப் போட்டு உடைத்தாள். அப்போது மாமனார் படுக்கையில் இல்லை. நடமாடிக் கொண்டு கொஞ்சம் ஆரோக்கியமாக இருந்த நாட்கள் அவை.

''உங்க ஒரே பையன் இவ்வளவு பிரச்னைகளில் தனியாகக் குமுறிக்கொண்டிருக்கிறார் என்பதாவது தெரியுமா உங்கள் இருவருக்கும்?'' என்று கேட்டாள்.

ஹாலே கொஞ்ச நேரம் பிரளயமாகியது.

இந்த விஷயத்தை ராஜா ஏன் இத்தனைய காலமாக மறைத்தான் என்பதைத்தான் பெரிய விஷயமாகப் பேசினார்கள் மாமனாரும் மாமியாரும். முதலிலேயே தெரிந்திருந்தால் அதைச் செய்திருப்பேன், இதைச் செய்திருப்பேன், ராஜாவின் கையை வெட்டி அடுப்பில் வைத்திருப்பேன் என்று குதித்தார் மாமனார். ராஜா மௌனமாகத் தலை குனிந்தபடி நின்றான். நடுநடுவே சந்தியாவை முறைத்தான். எல்லாம் பேசித் திட்டி முடித்தபிறகு என்ன செய்வது என்று முடிவு எடுக்காமலேயேஆளாளுக்குக் கலையத் தொடங்கினார்கள்.

சந்தியா தலையிலடித்துக்கொண்டாள். பிரச்னை என்று வந்தால் அதைத் தீர்ப்பது பற்றி யாருமே கவலை கொள்வதில்லை, தான் அதற்குக் காரணமில்லை என்று தப்பிக்க முயல்வதும் முடிந்தால் இன்னார் தான் காரணம் என்று எவர் தலையிலாவது கட்டி விடுவது

மட்டுமே காலகாலமாய் நடந்துவருகின்றன..

"நான் உங்கள் மூவரையும் இங்கே கூட்டியது ராஜாவை யார் அதிகம் திட்டுகிறார்கள் என்று பார்ப்பதற்காக இல்லை. அவருடைய பிரச்னைக்கு நாம் எந்த வகையில் உதவப் போகிறோம் என்று முடிவெடுக்க" என்றாள் குரல் உயர்த்தி.


"நான் என்னம்மா செய்யமுடியும்? இன்றைய தேதிக்கு நான் வெறும் ஆள்" என்றார் மாமனார் சிறிய குரலில்.

"நான் வேலைக்குப் போகலாமென்றிருக்கிறேன் " என்றாள்.

ஹாலில் திடீர் அமைதி.

"எனக்கு ஷார்ட் ஹான்ட் டைப்ரைட்டிங் தெரியும். நல்ல ஆங்கில அறிவு இருக்கிறது. முயற்சிசெய்து பார்க்கிறேன். உங்க பையன் சீட்டையோ குடியையோ தொடக் கூடாது என்று சத்தியம் பண்ணச் சொல்லுங்கள். அவர் வாங்குகிற சம்பளத்தில் என்னால் ஐநூறு ரூபாய் வரை மாதம் மிச்சம் பிடிக்க முடியும். எனக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தால் கூட இரண்டாயிர ரூபாய் சீட்டுப் போட்டு இரண்டே வருடத்தில் நாற்பதாயிரம் கடனை எளிதாக அடைத்து விடலாம்" என்றாள்.

மாமனார் மாமியார் சந்தோஷப்பட்டார்கள். ராஜா கூட முறைப்பு மீறி மலர்ச்சி காட்டினான்.



## துளிப்பா!

வெண்மை வயலில்
யார் தூவியது
க்ருப்பு விதைகள்?
காகிதத்தில் எழுத்துக்கள்...

– புஷ்பராணி

அடுத்த இரண்டு மாதங்களில் ஒரே முனைப்பாக இருந்து வேலை பெற்றாள். ஆயிரத்து முன்னூறு ரூபாய் தொடக்கத்தில் தருவோம். பர்ஃபார்மன்ஸ் பார்த்து மேலே பார்க்கலாம் என்று கன்டிஷன் போட்டு அப்பாயின்மென்ட் ஆர்டர் தந்தார்கள். சந்தியாவுக்கு தன்னம்பிக்கை இருந்தது..

வீட்டில் அத்தையின் உதவியும் ஒத்துழைப்பும் இருந்தன. சுற்று வேலைகளில் மாமனாரின் ஒத்தாசையும் இருந்தது. புதிய முயற்சி, குடும்பத்தில் திருப்பு முனை ஏற்படுத்தப் போகிற சாதனை என்பதால் சந்தியாவிடமும் உற்சாகம் இருந்தது. விறுவிறு என்று ஒரு மாதம் ஓடியது தெரியாமல் ஓடியது.

முதல் தேதியில் சம்பளம் பார்த்தால் ராஜாவுடையதில் ஆயிரம் ரூபாய் குறைந்திருந்தது.

''நீ வேலை பார்க்காததாகவே கன்சிடர் பண்ணிக்கலாம் சந்தியா. சீட்டுப் போட்டு ரெண்டு வருஷத்தில் சேர்க்கற பணத்தை சீட்டாட்டத்தில் ரெண்டே நிமிஷத்தில் சேர்த்திடலாம். அதுவும் ஆயிரம் ரூபாய் எல்லாம் வைத்து ஆடினால் சான்ஸ் ரொம்ப ஜாஸ்தி. ஏதோ இந்த மாதம் போயிருச்சு இந்த ஆட்டமே அப்படித்தான். போகும் வரும், அடுத்த மாதம் பார்'' என்றான்.

மறுநாள் சந்தியா வேலைக்குப் போகவில்லை.

''என்ன லீவா?'' என்று கேட்டான்

''ராஜினாமா பண்ணிட்டேன்'' என்றாள்.

''வாட்?''

''ஆமா. நான் வீட்டு வேலையும் பார்த்துட்டு ஓடி ஓடிப் போய் விரலொடிய டைப் அடிக்கறது நீங்க சீட்டாட்டத்துல தொலைக்கறதுக்கு இல்லை. ஒரு மாதம் முட்டாள் தனம் பண்ணி விட்டேன். இனிமேல் பண்ணுவதாக இல்லை'' என்றாள் உறுதியாக. மாமனார் மாமியார் கெஞ்சிப் பார்த்தார்கள், இனிமேல் திருந்திடுவாம்மா என்று ராஜா சார்பில் உறுதி தந்தார்கள். ராஜா கெஞ்சல் தாண்டி உருட்டல் மிரட்டல் அடி என்று கூடப் போய்ப் பார்த்தான்.

சந்தியாவுக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. தவறு செய்வதன் ஆரம்பகட்டத்தில் இருப்பவனைத் தான் அறிவுரைகளும் ஆறுதல் மொழிகளும் துணையின் ஒத்துழைப்பும் திருத்த இயலும். தவறுகளை வாழ்க்கை முறையாக ஆக்கி விட்டவனும்,

அவ்வப்போது வருந்துவதான சுய இரக்கத்தில் மூழ்கிப் புலம்புபவனும் திருந்த வேண்டுமானால் வாழ்க்கையே ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் ஏற்படுத்தினால்தான் உண்டு. அப்படி ஓர் அதிர்ச்சி வைத்தியம் எப்போது யாரால் ஏற்படப் போகிறது என்று யார் அறிவார்? சந்தியா பொறுமையாகக் காத்திருந்தாள்.

## 8



"சந்தியா..." என்று உலகம்மாள் அழைக்கும் குரல் கேட்டு எழுந்து வாசலுக்கு விரைந்தாள் சந்தியா.

"என்ன அத்தை?"

உள் அறையில் மாமா புலம்பிக் கொண்டிருந்தது கேட்டது. அத்தையின் முகத்தில் கலவரம் தெரிந்தது.

சந்தியா அவள் அருகே போய் அமர்ந்து அவள் கைகளை எடுத்து ஆறுதலாக வைத்துக் கொண்டாள்.

"கவலைப்படாதீங்க அத்தை" என்றாள்.

மாமா படுத்தபின் அத்தை ரொம்பவும் தான் மாறிப் போயிருந்தாள். மகன் மீதான நம்பிக்கையும் குறையக் குறைய மருமகள் மீது பிரியம்

கூடியபடி இருந்தது.

''எனக்கு உங்க மாமாவைப் பற்றிக் கூட கவலை இல்லை சந்தியா. ராஜாவை நினைத்தால் பயமாக உள்ளது. என்ன ஆவானோ தெரியலையே..?'

ஒண்ணும் ஆகாதும்மா பயப்படாதீங்க என்று சொல்ல நினைத்து சொல்லாமல் இருந்தாள் சந்தியா.

''அவன் அப்பாவுக்கும் அதே கவலைம்மா. கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் ஆகப் போகுதே ஒண்ணும் வாரிசு ஜனிக்கலையேங்கற கவலைல கண்டா குடிக்கிறானோ என்னவோ...''

சந்தியாவுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

''சீக்கிரமா ஒரு பிள்ளை பெத்துக்கோ சந்தியா. குழந்தை முகத்தைப் பார்த்துத் திருந்த மாட்டானா என்ன?''

இதற்கும் சந்தியா பதில் பேசவில்லை.

''எதாவது பேசு சந்தியா. இப்போதெல்லாம் நீ பேச்சை ரொம்பவே குறைச்சிட்ட. உன் கிட்ட பிரியமா இருக்கறானில்லையா? குறை ஏதும் வைக்கறானா? டாக்டர்கிட்ட காட்டறமாதிரி எதுவும்...''

''நீங்க அந்த மாதிரி எல்லாம் நினைக்க வேண்டாம் அத்தை. எல்லாம் நல்லபடியா நடக்குது எதுக்கும் பகவான் மனசு வைக்கணும் இல்லையா?'' என்றாள் சந்தியா.

கிழவியை ஏமாற்றுகிறோமே என்கிற இரக்கம் வந்தது. அப்படியே அவள் மடியில் படுத்துக் கொண்டாள். ஒரு கணம் ராஜா சரியில்லாமல் இருப்பது கூட நல்லது தான் என்று பட்டது. இப்படி ஒரு நல்ல அத்தை எப்படிக் கிடைத்திருப்பாள் !

''அவங்கப்பாவுக்குப் போக வேண்டிய காலம் வந்திருச்சுன்ன தோணுது சந்தியா. ராத்திரிகளில் அவர் புலம்பறப்போ கூப்பிட்டுப் பேசற யாரும் இப்போ உயிரோட இருக்கறவங்க இல்லை. பேரப் பிள்ளையைக் கொஞ்சாமல் போயிடக்கூடாதுன்னு தான் உயிரை இழுத்துப் பிடிச்சிட்டிருக்கார்னு நினைக்கிறேன் சந்தியா...''

உலகம்மாளின் குரலும் உடலும் நடுங்கின.

# 9



ராஜா இரவு எட்டு மணிக்கு வந்தான். காலை நேரத்தில் இருந்த கடுகடுப்பு இப்போது இல்லை. கொஞ்சம் தெளிவாக இருந்தான். குற்ற உணர்வு காரணமாக சந்தியாவிடம் பேசாமல் அவள் வைத்த உணவைச் சாப்பிட்டான்.

அவன் எழுந்து போகவும் சந்தியா அடுக்களையில் எல்லாவற்றையும் மூடி வைத்துக் கொண்டிருந்தாள். அவன் அறைக்குள் போயிருந்தான். மேசையில் காலை கொட்டப் பட்ட காபியும் தம்ளரும் அப்படியே இருக்கின்றன. என்ன செய்வான் என்று யோசித்துக்கொண்டிருந்தாள்.

''சந்தியா...''

வீடு அலறக் கூப்பிட்டான்.

நிதானமாக அறைக்குள் நுழைந்தாள் சந்தியா.

அவன் தன் மேசையையும் தரையையும் இன்னமும் நம்பமுடியாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

''என்னடி இதெல்லாம்? என்று சீறினான்.

''காலையில் நீங்கள் கொட்டியது'' என்றாள் அமைதியாக. ''நீங்களே சுத்தம் பண்ணுங்கள்'' என்ற படி கட்டிலுக்கு நடந்து

சுருங்கியிருந்த படுக்கை விரிப்பை நீவி விட்டாள்.

அவளுடைய அந்த அலட்சியம் அவனை இன்னும் தூண்டி விட்டது.

''ஏண்டி முண்டை ! நான் கேட்டுட்டிருக்கேன். இது சுருங்கியிருக்கிறது தான் முக்கியமாகப் போச்சா?'' என்ற படி அவளைப் படாரென்று தள்ளி விட்டு படுக்கை விரிப்பைக் கொத்தாய்ப் பிடித்து உருவிக் கசக்கி எறிந்தான். மெத்தையைத் தூக்கி எறிய முயன்றான்.அடியிலிருந்து ஒருமாத்திரைப் பட்டை நழுவிக் கீழே அவன் காலடியில் விழுந்தது.

சந்தியாவின் இதயம் ஒரு வினாடி துடிக்க மறந்து பிறகு வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது.

ராஜா குனிந்து அந்த மாத்திரைப் பட்டையை எடுத்துப் பார்த்தான்.

கருத்தடை மாத்திரைகள் !

அவனுடைய சர்வ அங்கமும் ஒரு விநாடி குலுங்கி அதிர்ந்தது.

''என்னடி இது? எவ்வளவு நாளா இந்தக் கண்ணறாவி?'' என்று கேட்டபோது அவன் கண்கள் கன்றிச் சிவந்து போயிருந்தன.

சந்தியா பேசாமல் நின்றாள்.

''செய்யறதையும் செஞ்சிட்டு ஊமை மாதிரி நின்னா என்னடி அர்த்தம்? சொல்லு ய்ாரை ஏமாத்ற நீ? நான் ஆபீஸ் போன பிறகு இங்கே எவனும் வந்து போறானா?''

நாக்கூசாமல் கேட்டான்.

சந்தியா விழி சிவக்க நிமிர்ந்தாள்.

''ஏன் உங்க அம்மாவும் அப்பாவும் தான் முன் அறையில் இருக்காங்க. அவங்களைக் கேட்கறது தானே ஒவ்வொரு நாளும் எத்தனை பேரை உள்ளே அனுப்பறாங்கன்னு...'' என்றாள் வன்மமான குரலில்.

ஓங்கி ஓங்கி அறைந்தான்.

''அம்மா'' என்று அலறினாள் சந்தியா.

முடியைப் பிடித்து அவளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான்.

''அம்மா'' என்று உரத்த குரலில் கூப்பிட்டான். உலகம்மாள் ஓடி வந்தாள்.

''ஏண்டா. ஒரு நாளைப் போல அமைதியா இருக்கவே மாட்டியா. உங்சப்பா பிராணன் போயிட்டிருக்கு. நீ வேற ஏண்டா...?

என்றவள் கீழே கொடி போல் கிடந்த சந்தியாவைத் தூக்கினாள். சந்தியாவின் கண்களில் தாரை தாரையாய் ஓடிக் கொண்டிருந்தது கண்ணீர்.

மாத்திரைப் பட்டைகளை விசிறி அடித்தான் கீழே. கேள் உன் மருமகள் பண்ற காரியத்தை. என்னைக் கையாலாகாதவன் என்று ஊர் உலகம் ஏளனம் பண்ணிச் சிரிக்கணும்ங்கறதுக்காகவே கருத்தடை மாத்திரை சாப்பிட்டிட்டிருக்கா எனக்கும் தெரியாமல். திருட்டு நாய்...''

வாய் குழறியது அவனுக்கு. பெருகி வந்த ஆத்திரத்தை எதில் காட்டுவது என்று தெரியாமல் குமைந்தான்.

''கேளும்மா அந்த முண்டையை என்ன கேவலமாய்ப் போயிட்டேனாம் நான்...''

பேச நாஎழ மறுத்தது. எவ்வளவு பெரிய அவமானம் ! உன் கருவை நான் சுமக்க மாட்டேன் என்று ஒரு மனைவி சொல்வது ஆண்மையை ஸ்தம்பிக்க வைக்கும் விஷயம். இதனைத் தாயிடம் சொல்லி நீதி கேட்க வேண்டிய நிலை பரிதாபமான கேவலம் !

ஹாலுக்கு அவளை இழுத்து வந்திருக்க வேண்டாமோ என்று தோன்றியது. அறையிலேயே அடித்துக் கேட்டிருக்கலாம். என்ன கேட்க முடியும்? நீ பெண்டாண்டு விட்டால் மட்டும் நான் உனக்குச் சொந்தமானவள் என்று எண்ணிக்கொள்ளாதே என்று சொல்லாமல்



## துளிப்பா!

யார் அடித்தது
வானத்தை..?
உதிர்க்கிறது
கண்ணீர்

— புஷ்பராணி

சொல்லிக் காட்டி விட்டாளே ! சே !

என்னவெல்லாமோ எண்ணங்கள் ஓடியது அவனுக்குள். அப்படியே தொப்பென்று அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து தலையில் கைவைத்துக் கொண்டான்.

''என்னம்மா இதெல்லாம்? என்னவெல்லாமோ சொல்றானே ராஜா. நிஜம் தானா?'' என்று கேட்டாள் உலகம்மாள் குரல் நடுங்க.

சிறிது நேரம் அந்த ஹாலில் மரண அமைதி. யாருக்குமே என்ன செய்வதென்று புரியவில்லை.

உலகம்மாள் மெல்ல கைநீட்டி அந்த மாத்திரைப் பட்டையை எடுத்துப் பார்த்தாள்.

சந்தியா எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''அத்தை !நான் தினமும் கருத்தடை மாத்திரை சாப்பிடுவது நிஜம்'' என்றாள் தெளிவாக பிசிறடிக்காத குரலில்.

உலகம்மாள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்.

''ஆனால் உங்க மகன் நினைக்கற மாதிரி அவரை மதிக்காததாலோ அவரைக் கேவலமாக நினைக்கறதாலோ இல்லை. நம்மை எல்லாம் விட முக்கியமானது வரப்போகிற நம்ம சந்ததி. என் பிள்ளையை, உங்க பிள்ளை திருந்தறாரான்னு பார்க்கறதுக்காகவோ, சாகப் போகிற என் மாமனார் திருப்தியா சாகணும்ங்கறதுக்காகவோ பெத்துக் கொள்ள நான் தயார் இல்லை. அது ஒரு டெஸ்ட் ஸ்பெசிமன் இல்லை. ஓர் உயிர் அதனை உருவாக்குவதில் தாய் தகப்பன் அக்கறை காட்டாவிட்டால் அது உருப்படியா இருக்காது. நாங்க இரண்டு பேரும் ஒண்ணா இருக்கறதைக் காட்டற சான்றா பிள்ளை பெற்றா அது எதிர் கால உலகத்துக்கு நல்ல பிறவியாக இருக்காது. அந்த ஜீவன் உருவாவது எங்கள் சந்தோஷத்தின் பலனாக இருக்க வேண்டும். அது பிறந்து தவழும்போது வீட்டில் அமைதியும் சாந்தமும் வேண்டும். குடிகார சீட்டாடி அப்பாவைப் பார்ததுப் பார்தது பயந்து ஒடுங்கி வளரக் கூடாது. விவரம் அறிந்து அதன் கண்களில் தாய் தகப்பனின் அன்புதான் படவேண்டும் தினமும் சண்டையையும் அடிமைத்தனத்தையும் பார்க்கக் கூடாது. அதற்கான சூழ் நிலை இங்கே இல்லை. இது இன்றைய தேதியில் வீடாக இல்லை. என் மகனை இந்தச் சூழலில் பெற்று வளர்த்தேன் என்றால் அவனைத் திருத்தும்படி இன்னொருமருமகளிடம் நான் கையேந்த வேண்டும்.

''பிள்ளை பெற்றுப் பாரேன் திருந்தறானான்னு'' என்று இப்போது நீங்கள் செய்யும் அதே தவறை நானும் செய்யவேண்டி வரும் நான் அதற்குத் தயாரில்லை என் மகன் லட்சியப் பிள்ளை. அவன் பிறக்கும் நேரம் இன்னும் வரவில்லை.''

கோவென்று கதறி அழுதாள் கிழவி.

''தாயே! நீ சொல்ற எல்லாம் சரிதாம்மா. புரியுதும்மா. நாங்களெல்லாம் யோசிக்கலையே... நீயாவதுயோசிக்கறியே. அந்த நாள் வருமான்னே தெரியலையே...'' இந்தத் தடியன் திருந்துவானான்னு தெரியலையே...!

''எல்லா வற்றுக்கும் ஒரு நாள் வரும் அத்தை. உங்க மகன் நிச்சயம் மாறிவருவார். உங்க பையனிடம் எவ்வளவோ கெட்டப் பழக்கங்கள் இருந்தும் பெண் விசயத்தில் ரொம்ப நல்லவர்னு தெரியும். அதுதான் எனக்கும் பிரம்மாஸ்திரம். அவர் குணம் மாறி நல்ல குடும்பஸ்தராய் வரும் நாள் வரை என் வயிறு காத்திருக்கும். எனக்கு மட்டும் பிள்ளை சுமக்கும் ஆசை இல்லாமலா இருக்கிறது? என் மகன் பிறக்கும் போதே அறுபதினாயிரம் ரூபாய் கடனுடன் பிறக்க வேண்டாம்னு பார்க்கிறேன். ஒரு பிள்ளையாய் இருந்தாலும் என்னுடைய நாற்பதாவது வயதில் பிறந்தாலும் அமைதியும் சாந்தமும் நிம்மதியும் நிறைந்த சூழலில் பிறக்கட்டும்னு பார்க்கிறேன்.அந்த சூழல் ஒரு நாள் உருவாகும்னு உறுதியான நம்பிக்கையை மட்டும் விட வில்லை நான்...'' என்ற படி எழுந்தாள்.

மாத்திரைப்பட்டையில் இருந்து ஒரு மாத்திரையை எடுத்தாள். ''இனி மேல் ஒளித்து ஒளித்துப் போட வேண்டிய அவசியம் தான் இல்லையே'' என்று அவர்கள் முன்னிலையிலேயே மாத்திரையை விழுங்கினாள். அறைக்கு நடந்தாள். அதிர்ச்சி வைத்தியங்களை வாழ்க்கை இப்படித்தான் நிகழ்த்துகிறது.

கிழவரின் இருமல் சப்தம் கேட்டு உலகம்மாளும் எழுந்து போய் விட ராஜா நெடுநேரம் அந்த நாற்காலியிலேயே உட்கார்ந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தான்.

முற்றும்.

Arunachalam Tamil Novel monthly Regd No: TN/NM/20
Registrar of News paper of India. May 99 Rs 5/-



இமயப் பதிப்பகம்
பொன் விழா
ஆண்டு

புத்தக வெளியீட்டு விழா